## திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்கள் குடும்ப

# ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 15 –

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000 தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.01.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உயர்த்தப்பட்ட பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் முதல் முறையாக பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000 வழங்கிடும் அடையாளமாக 12 நபர்களுக்கு பொங்கல் கருணைக் கொடைக்கான காசோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை பாதுகாத்திடும் வகையில் புத்தாடைகள் மற்றும் சீருடைகள், பொங்கல் கருணைக் கொடை, குடியிருப்புகள், குடும்ப நலநிதி, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், முழு உடற் பரிசோதனைத் திட்டம் போன்ற பல்வேறு முனைப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை வழங்கப்பட்டு வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றப்பின், 2023–24–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, 2024–ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு முதன்முறையாக பொங்கல் கருணை கொடையாக ரூ.1000மும், அதனைதொடர்ந்து 2025–ஆம் ஆண்டு முதல் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் முதன்முறையாக பொங்கல் கருணைக் கொடையாக ரூ.1000 வழங்கப்பட்டது.

2025–2026–ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்புகளில் ”துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் பொங்கல் கருணைக் கொடை ரூ.1000, அவர்களின் நலன் கருதி ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும், ”திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, பணியாளர் சேமநலநிதி நிறுவனம் (EPF) மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் முதல்முறையாக பொங்கல் கருணைக்கொடை ரூ.2000/– வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொங்கல் கருணைக் கொடை ரூ.1,000 த்தை ரூ.2,000ஆக உயர்த்தி அதற்கான காசோலைகளையும், தொழிலாளர் சேமநலநிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல்முறையாக பொங்கல் கருணை கொடை ரூ.2,000 க்கான காசோலைகளையும் வழங்கினார்.

இதன் மூலம் துறை நிலையிலான மற்றும் தொழிலாளர் சேமநலநிதி மூலம் ஓய்வூதியம் பெறும் 3,069 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 796 குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.

இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் 6,894 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 4,893 தினக்கூலி/தொகுப்பூதிய பணியாளர்கள் ஆக மொத்தம் 11,787 பணியாளர்களுக்கும், 3,865 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் என மொத்தம் 15,652 நபர்கள் பொங்கல் கருணைக் கொடை பெற்று பயனடைகின்றனர். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன்,1 இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை இரவிச்சந்திரன், பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, சிறப்பு பணி அலுவலர் சி.லட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சென்னை மாநகராட்சி 159 வது மீனம்பாக்கத்தில் சமத்துவ திராவிட பொங்கல் விழா நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவைக் குழு தலைவர் டி. ஆர். பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி கழகத் தீர்மான குழு செயலாளர் மீ. அ. வைத்தியலிங்கம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டு நல திட்ட உதவிகள் வழங்கினார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் வட்டக் கழக செயலாளர் மீனம் ப. கிருஷ்ணமூர்த்தி மாமன்ற உறுப்பினர் அமுதப்பிரியா ஆகியோர் உடன் இருந்தனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில்

# 250 நபர்கள் - 250 திருநங்கைகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

*சென்னை,ஜன.15 -*

*சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் 13/1/26 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் 6வது மண்டலக் குழு தலைவரும் தலைமை பொதுக் குழு உறுப்பினர் சரிதா மகேஷ் குமார் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் செ. தமிழ் வேந்தன் முன்னிலையில் தூய்மை பணிக்கு வாகனம் ஓட்டும் ஓட்டுநர்கள், கழிவு நீர் அகற்றும் வாகன ஓட்டுனர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள்,ஆட்டோ ஓட்டுநர்கள் என 250 நபர்களுக்கும் மற்றும் 250 திருநங்கைகளுக்கும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு ஆகியோர் பொங்கல் பொருட்கள், புத்தாடை கள், பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றி னர்.*

*இச்சிறப்புமிகு விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன் ,சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல்,கே.எஸ்.ரவிச்சந்திரன்,பி.*



*கே. மூர்த்தி,கூ.பீ.ஜெயின்,சி. மகேஷ்குமார், எம் சாமி கண்ணு, பெரம்பூர் ராஜன் புனிதவதி எத்திராசன்.எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி,ஜி. சாந்தகுமாரி.எம்.சி,நாகவள்ளி பிரபாகரன்.எம் சி,இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது வழக்கறிஞர் மு. சரவணன் எம்.சி., ரமணி லோகேஷ் எம். சி, தமிழ்ச்செல்வி, சசிகுமார் எம்சி, எம் இசட்.அபாய் , எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ் பாபு, எம் ருத்ரமூர்த்தி, எஸ் புஷ்பராஜ், ஜி.கிருஷ்ண குமார், எஸ்.சசிகுமார், பா. பி.தாஸ், டி.சுரேஷ் குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

## மு.சண்முகம் — பா.மணிமாறன் பங்கேற்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர களப்பணி ஆற்றுவோம்!

## தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. பொதுக்குழுவில் தீர்மானம்!



சென்னை, ஜன. 15 –

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 22வது மாநில பொதுக்குழுவில் 2026ல் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான பொற்கால ஆட்சி தொடர மின்கழகத் தொ.மு.ச. வினர் கடுமையாக களப்பணி யாற்றிட வேண்டும் என தீர்மானம் ஏகமனதாக நிறைவே ற்றப்பட்டது.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 22வது மாநில பொதுக்குழு கூட்டம் 10.1.2026ல் அன்று சென்னை வேப்பேரி, பெரியார் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க மாநிலத்தலைவர் கே.சசி குமார் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் பா.மணிமாறன் முன்னிலை, மாநில சிறப்புத்தலைவர் நெல்லை எஸ்.நடராசன் வரவேற்புரையுடன் நடைபெற்றது.

அகில இந்திய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம், அவர்கள், பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் மற்றும் பேரவை நிர்வாகிகள், பொதுக்குழுவில் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

2026–ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று திமுகழகம் 7வது முறையாக ஆட்சியில் அரியணையில் அமர / கழகத் தலைவர் அன்புத் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சி தொடரவும், தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாடு முதலமைச்சராக மக்கள் பணியாற்றிட 2வது முறையாகவும் தேர்ந்தெடுக்க மின்கழகத் தொ.மு.ச.வினர் கடுமையாக களப்பணியாற்றிட வேண்டும்.

இப்பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அரசு ஊழியர்களின் 23 ஆண்டுக்கால கோரிக்கையை நிறைவேற்றி தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் TAPS – (Tamil Nadu Assured Pension Scheme) வழங்க உத்தரவு பிறப்பித்து அரசு ஊழியர்களிடம் மனமகிழ்ச்சியை ஏற்படுத்திய தொழிலாளர்களின் பாதுகாவலர் முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்து இப்பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இளைஞர்களின் எதிர்காலம், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், விளையாட்டு வீரர்கள், வீராங்கனை களின் விடியல் நாயகர், தமிழ்நாடு பல துறைகளில் முன்னேற்றம் பெற முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருந்து அயராது பாடுபடும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டி பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று முதலாம் மற்றும் இரண்டாம் அலையிலும், பேரிடர் காலங்களிலும், புயல், கடும் மழையிலும் தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிக்கொண்டிருக்கும் மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை வழங்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2019 முதல் 2024ம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு, செலவு கணக்குகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

ஒன்றிய அரசு கொண்டு வந்த மின்சார சட்ட திருத்த மசோதா, தொழி லாளர் நான்கு சட்ட தொகுப்புகளை ரத்து செய்யக் கோரி தீர்மானம்.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க, மத்திய சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலை சங்கத்தின் சட்டவிதிகளின்படி தொ.மு.ச. பேரவை முன்னின்று நடத்திட இப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானம்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள பேரவை இணைப்பொதுச்செயலாளர் திரு.ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராகவும் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள 10.1.2026 முதல் 25.1.2026 வரையிலான தேர்தல் அட்டவணையின்படி, வாக்குப்பதிவை 25.1.2026 அன்று திருச்சி, பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அலுவலகத்தில் நடத்திட முடிவு செய்துள்ளதையும் இப்பொதுக்குழு ஒருமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட 30 தீர்மானங்கள் இப்பொதுக்குழுவில் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.

சங்கத்தின் பொருளாளர் தே.மெய்ஞானமூர்த்தியால் வாசிக்கப்பட்ட 2019, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை இப்பொதுக்குழு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

முன்னதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வாசித்த ஆண்டறிக்கையினை இப்பொதுக்குழு ஒரு மனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் மாநில துணை தலைவர்கள், துணை பொதுச்செயலாளர்கள், வட்டாரச் செயலாளர்கள், திட்டத் தலைவர்கள், திட்டச் செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் என 557 பேர்களும் மற்றும் பார்வையாளர்கள் 500க்கு மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இப்பொதுக்குழுவில் நிறைவாக மாநில முதன்மைச் செயலாளர் தே.முரளிகுமார் நன்றி கூறினார்.



திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு சமத்து பொங்கலை துவக்கி வைத்து உறியடி விளையாட்டில் பங்கேற்று பானை உடைத்தார் நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன் நகராட்சி ஆணையர் தாமோதரன் உள்பட நகர் மன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர்–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.*

*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம்–8–க்கு உட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | தேனி வடக்கு | பா.விஜயகுமார், 30-அ, பள்ளிவாசல் அருகில், சர்ச் தெரு, முத்துத்தேவன்பட்டி, வீரபாண்டி, தேனி மாவட்டம். |
| 2 | தேனி தெற்கு | சி.கே.இரவிக்குமார், வார்டு - 2, வேத கோவில் தெரு, குள்ளப்பகவுண்டன்பட்டி (அஞ்சல்), உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம். |
| 3 | விருதுநகர் வடக்கு | ம.ஆறுமுகம், 4/702, கட்டாலங்குளம், எஸ்.மறைக்குளம் அஞ்சல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம். |
| 4 | விருதுநகர் தெற்கு | சோ.ஆனந்தகுமார், 287, மாரியம்மன் கோயில் தெரு, திருவில்லிப்புத்தூர் - 626125. |
| 5 | இராமநாதபுரம் | சா.ரசாக், 6/43, அமீர் நகர், வன்னிக்குடி, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம் - 623502. |
| 6 | சிவகங்கை | மு.வீரஈஸ்வரன், 245, கோட்டையிருப்பு அஞ்சல், திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம். |
| 7 | தென்காசி வடக்கு | இரா.அருள் ஜோதி பாபா 51, நரசிங்கபெருமாள் கோவில் தெரு, புளியங்குடி - 627855. |
| 8 | தென்காசி தெற்கு | பீ.செய்யது பாட்ஷா, 2/52, பள்ளிவாசல் தெரு, முத்தம்மால்புரம், வி.கே.புதூர் வட்டம், தென்காசி - 62791 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14.01.2026

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று (14.01.2026) சென்னையில், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்களுடன் அவர்களின் கோரிக்கை குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர்.பூ.ஆ.நரேஷ் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.